**சுருக்கம்**

மாநில கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி திட்டம் – தருமபுரி மாவட்டம் – மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சியில் பாலம் கட்ட அனுமதிக்கப்பட்டது – அரசாணைக்கு திருத்தம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-2) துறை**

அரசாணை (நிலை) எண்.75 நாள்: 11.05.2015

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.7, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–2) துறை, நாள் 23.01.2015.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.37172/2013/டியு3, நாள் 08.04.2015.

●●●●●

ஆணை:

மேலே படிக்கப்பட்டவை 1–ல் உள்ள அரசாணையில் பிறவற்றிற்கிடையே தருமபுரி மாவட்டத்திற்கு 2014–2015ம் ஆண்டிற்கு மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி திட்டத்தின் கீழ் (State Infrastructure and Amenities Fund) ரூ.612.20 இலட்சம் மதிப்பீட்டில் 5 பாலங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்டவை 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், தருமபுரி மாவட்டத்திற்கு மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி நிதி திட்டத்தின் கீழ் (State Infrastructure and Amenities Fund) 2014–2015ம் ஆண்டில் ரூ.612.20 இலட்சம் மதிப்பீட்டில் 5 பாலங்களை கட்ட அனுமதிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.7, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–2) துறை, நாள் 23.01.2015–ற்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடுமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | ஊராட்சியின் பெயர் | நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணியின் பெயர் | திருத்தம் செய்து ஆணை வழங்க வேண்டிய விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | மொரப்பூர் | கோபிசெட்டிப் பாளையம் | “Construction of Causeway at A.Pallipatti – Morappur road to Gobichettipalayam” | “Construction of High Level Bridge at A.Pallipatti – Morappur road to Gobichettipalayam” | 150.00 |

(த.பி.பா.)

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அரசாணை (நிலை) எண்.7, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–2) துறை, நாள் 23.01.2015–க்கு, இணைப்பில் உள்ள தருமபுரி மாவட்டத்திற்கு கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிட்டு ஆணையிடப்படுகிறது.

<u>திருத்தம்</u>

"வ.எண்.5–ல் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சியில் "Construction of Causeway at A.Pallipatti – Morappur road to Gobichettipalayam" என்பது Construction of High Level Bridge at A.Pallipatti-Morappur road to Gobichettipalayam என படிக்கப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ககன்தீப்சிங் பேடி
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சியர், தருமபுரி.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி.
தலைமை கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஊ.வ.) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.